ഫെബ്രുവരി 1929-ാം

വാല്യം 15 ലക്കം 2

3L
R65 ൝211, N41VD.
N24.152
186745

1339

Regd. No. M. 916.

OF THE REGISTRAR OF BOOKS
2-DEC 1924
MADRAS

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷிஸ்ரீ, 1924—1925. ஸம்புடம் 15.

கார்த்திகைமீ. NOVEMBER. ஸஞ்சிகை 2.



பத்ராதிபர். } ர. ஸ்ரீநிவாஸராகவ
கார்யதர்சி. } அய்யங்கார், எம்.ஏ.

விஷய ஸூசிகை.

1. ஹிந்துக்களின் ஸர்வபூத ஆநுகூல்யம்:—பத்ராதிபச். 25
2. முதலாழ்வார்கள்:—ஸ்ரீ. உப. கோமடம். ஸ்ரீநிவாஸ அய்யங்கார். 31
3. ஸ்ரீதேசிகாபிமான விசேஷம்:—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 33
4. பாகவத ஸ்வரூபமும் வைபவமும்:—
வேளுக்குடி ஸ்ரீ. உப. வே. சேஷாத்ரி ஆசாரியர். 40
5. ஆசமனம்:—ஸ்ரீ. உப. வே. வெ. க்ருஷ்ணமாசார்யர். 46
6. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை, தமிழ்மொழி பெயர்ப்புடன்:—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 81
7. மதப்ராஷ்ட ப்ராயச்சித்தம்:—
ஸ்ரீ. உப. வே. வாஜபேயம் வீரராகவ தாதாசார்யர். 25

K. R. Press, Madras.

வருஷச்சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.

உலக ப்ரசித்தி பெற்றது.

| "டிக் - டாக்" | கடியாரம் விலை, | ரூ. 3. |
|---|---|---|



ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலை குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

## "டிக் - டாக்"

**கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.**

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,

தபால் பெட்டி நெ. 27.

மதராஸ்.

---

**ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம் மூலமும், தமிழ்மொழி பெயர்ப்பும்.**

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த இந்த அத்யத்புதமான நாடகம் ஸம்ஸ்க்ருதத்தில் இருப்பதினால் அனைவருக்கும் ப்ரயோஜனப்படவில்லையே என்பதைக்கருதி ஷை க்ரந்தத்திற்கு திருவஹீந்திரபுரம் வித்வான் பகவத்விஷயம் பண்டிதபூஷணம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியால் எழுதப்பட்ட ஸரியான தமிழ்மொழி பெயர்ப்புடன் வெளியிடப்பட்டிருக்கிறது. டிம்மி சைஸ் 680-பக்கம் கொண்டது.பைண்டுபுஸ்தகம் விலை ரூபா 4—8—0. தபாற்கூலிவேறு 0—8—0.

விலாசம்:— மானேஜர், நிகமபரிமளம் ஆபீஸ், ஸ்ரீசடகோப நிலையம்,

மௌண்ட் ரோட், சென்னை.

**P. R. S. பட்டாசார்யாரின்**

**பரத்வாஜ சந்தனதிகிருதம் அல்லது**

நீர்ரோக நிவாரண நெய்.—இது மூத்திர கோசங்களி லுண்டாகும் விரணங்கள், கெனேரியா வென்னும் வெள்ளை நோய் முதலிய வியாதிகளால் கஷ்டப்படும் ஸ்திரீ புருஷர்கள் இருபாலருக்கும் கைகண்ட மருந்தாகும். நீரடைப்பு முதலியதை வெகுசீக்கிரத்தில் திருத்துவதில் நிகரற்றது.

விலை 8 அவு - புட்டி 1 - க்கு ரூபாய் ... 2—0—0

தபால் செலவு வேறு. காட்லாக் வேண்டுபவருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

பரத்வாஜ ஆச்ரமம்,

பெருமாள் கோவில் வீதி, எழும்பூர், சென்னை.

2-DEC 1924
RAS

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 15.] ரக்தாக்ஷி ஹூ, கார்த்திகைமீ. [ஸஞ்சிகை 2.

" த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததானே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥

*ஸ்ரீபாகவதம்.* 1-9-23.

ஸ்ரீ:.

## ஹிந்துக்களின் ஸர்வபூத ஆநுகூல்யம்.

பகவானைச் சரணாகதி செய்கிறவர்களுக்கு ஆநுகூல்ய ஸங்கல்பம் பிரதானமான அங்கம். அதாவது பகவானுடைய ஆஜ்ஞையை மீறி நடக்காமல் அதை மிகவும் அன்புடனும், ப்ரீதியுடனும் அநுஷ்டித்து அவரை ஸர்வ விதத்திலும் தனக்கு யஜமானனென்றும், ஸர்வ லோகத்தையும் ஸ்ருஷ்டிக்கிறவனென்றும், தன்னைக் காப்பாற்றக்கூடியவனென்றும் விச்வாஸத்துடன் தன்னுடைய பிதாவைப்போல் ப்ரீதியுடன் பக்தி செய்துவரவேண்டும். இந்த ஆநுகூல்ய ஸங்கல்பத்தை நிர்வசனம் பண்ணும்போது அஹிர்புத்ந்யர், ஆநுகூல்ய ஸங்கல்பமாவது பகவானிடம் விச்வாஸத்துடனிருப்பதுமல்லாமல், இந்த ப்ரபஞ்சத்திலிருக்கிற ஸகல சராசர வஸ்துக்களும் பகவானுடைய சரீரமாதலால் அவைகளிலும் மிகவும் அன்புடனிருக்கவேண்டும், ' ஸ்தாவராணி ஜங்கமாநி ஸர்வாணி ஹரேர்வபு: । ததாநுகூல்யம் தேஷு கார்யமித்யேவ நிஶ்சய: ।' (ஜங்கமும் ஸ்தாவரங்களுமாகிய எல்லா வஸ்துக்களும் பகவானுக்குச் சரீரமானதால் அவைகளுக்கு அனுகூலனாயிருக்குகை செய்யவேண்டியது என்கிற நிச்சயம்) ஆநுகூல்ய ஸங்கல்பம் என்று அருளிச்செய்திருக்கிறார். இந்த அர்த்தத்தையே ஸ்ரீ கீதாசார்யன் தெய்வப்ரக்



18675

ருதியின் ஸ்வபாவத்தை வர்ணிக்கும்பொழுது ஸர்வபூதத்திற்கும் ஹிதத்தைச் செய்வதில் ஆஸக்தியையுடையவன் அப்பரக்ருதியைச் சேர்ந்தவனென்றும், உலகத்திலுள்ள ஸகல வஸ்துக்களுக்கும் ஒவ்வொரு ஜீவாத்மா அதிஷ்டானமாயிருப்பதால் அந்த ஜீவாத்மாக்களுக்குள் வ்யத்யாஸம் தோன்றுவது கர்மாநுகுணமாய்வந்த சரீர தோஷத்தால் என்றும், பிறகு முக்தர்களான ஜீவாத்மாக்கள் ஒரேமாதிரியான ஸகல கல்யாணகுணங்களை உடைத்தாயிருப்பதால் ஸமம், ஆகையால் ஸகல பூதங்களுக்கும் அதிஷ்டானமான ஜீவாத்மாக்கள் ஸமம் என்று நினைக்கவேண்டும் என்றும், அர்ஜுனன் என்பவனை வ்யாஜமாக வைத்துக்கொண்டு ஸகல லோகத்துக்கும் உபதேசம் பண்ணியருளினன். விஷ்ணு புராணத்தில் யமகிங்கர ஸம்வாதத்தில் 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂. (எல்லா உயிருள்ள வஸ்துக்களில் ஸ்நேஹமுள்ளவன்) மனஸில் வாஸுதேவன் வஸிக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பாச்சாத்யர்கள் இவ்வளவு விரிவான ஹ்ருதயமில்லாமல் ஸகல மனுஷ்யர்களுக்கும் ஹிதமாக இருக்கவேண்டுமென்று முதலில் சொல்லி, பிறகு ம்ருகங்களையும் ஜீவகோடியில் சேர்த்து அவைகளுடைய ஸுகதுக்கத்தையும் நம்முடையதாகப் பார்க்கவேண்டும் என்று, ப்ராணி ஹிம்சை செய்பவர்களைத் தடுப்பதற்கு ஒரு ஸங்கம் உண்டாக்கி ம்ருகங்களுக்கும் ஔஷத சாலைகள் கட்ட ஆரம்பித்தார்கள். இவர்கள் ஸ்தாவர வர்க்கத்தையே இந்தக் கோடிக்குள் சேர்க்கவில்லை. இவர்கள் வெகுகாலம் கழித்து, தெரிந்த தத்வத்தை நம்முன்னோர்கள் தெரிந்து அநாதிகாலமாய் அனுஷ்டித்துப் பிறருக்கும் உபதேசித்து வந்தார்கள். பாடலிபுத்ரத்தை ராஜதானியாக வைத்து ஆண்டுவந்த இந்திய சக்ரவர்த்தியாகிய அசோகமஹாராஜா இந்த ஸூக்ஷ்மத்தை அறிந்து மனுஷ்யர்களுக்கு எப்படியோ அப்படியே ம்ருகங்களுக்கும் வைத்திய சாலைகளைக் கட்டிவைத்தார். இந்த விஷயம் அவர் சாச்வதமாக இருக்கவேண்டுமென்று மலைகளில் பாளிபாஷையில், அந்த நாள் எழுத்தில் வெட்டிவைத்த சிலா சாஸனங்களிலிருந்து ஸ்பஷ்டமாகிறது.

இப்படிப்பட்ட உயர்ந்த தர்மத்தை அறிந்து, பிறருக்கு உபதேசித்த நம் மதப்ரவர்த்தகர்களின் விசாலமான மனதின் பரிபாகம் கயையில் பிண்டதானம் செய்ய ஏற்பட்டிருக்கும் மந்திரங்களால் வ்யக்தமாகும். அவைகளை இங்கு உதாஹரிப்போம்.—இறந்துபோன பித்ருபிதாமகன் முதலான ஸகல பந்துவர்க்கத்தாருக்குப் பிண்டதானம் செய்தபிறகு மற்ற ஜீவாத்மாக்களுக்குப் பின்வரும் மந்த்ரங்களால் பிண்டதானம் செய்யப்பட்டுவருகிறது.

𑌅𑌸𑍍𑌮𑌤𑍍𑌕𑍁𑌲𑍇 𑌮𑍃𑌤𑌾 𑌯𑍇 𑌚 𑌗𑌤𑌿𑌰𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
𑌮𑌾𑌤𑌾𑌮𑌹𑌕𑍁𑌲𑍇 𑌯𑍇 𑌚 𑌗𑌤𑌿𑌰𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।

[library stamp]



𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥
𑌬𑌨𑍍𑌧𑍁𑌵𑌰𑍍𑌗𑌕𑍁𑌲𑍇 𑌯𑍇 𑌚 𑌗𑌤𑌿𑌰𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

என்னுடையவும், என்தாயாருடையவும், என்பந்துவர்க்கத்திலும் எவர்கள் இறந்து நல்லகதியை அடையாமலிருக்கிறார்களோ அவர்கள் நல்லகதியை அடையும்பொருட்டு இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌅𑌜𑌾𑌤𑌦𑌨𑍍𑌤𑌾 𑌯𑍇 𑌕𑍇𑌚𑌿𑌦𑍍𑌯𑍇 𑌚 𑌗𑌰𑍍𑌭𑍇 𑌪𑍍𑌰𑌪𑍀𑌡𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

பல்லு முளைப்பதற்கு முன் செத்தும் கர்பத்திலே மரித்தும்போன ஜீவாத்மாக்கள் நல்லகதியை அடையவேண்டியதற்காக இந்தப்பிண்டத்தைக்கொடுக்கிறேன்.

𑌅𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍 𑌅𑌨𑌗𑍍𑌨𑌿𑌦𑌗𑍍𑌧𑌾𑌃 𑌤𑌥𑌾𑌪𑌰𑍇 ।
𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌚𑍍𑌚𑍌𑌰𑌹𑌤𑌾 𑌯𑍇 𑌚 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

எவர்கள் அக்னியால் எரிக்கப்பட்டவர்களோ, எவர்கள் அக்னியால் எரிக்கப்படவில்லையோ எவர்கள் இடிவிழுந்தும், திருடர்களால் அடிப்பட்டும் மரணமடைந்து இருக்கிறார்களோ அவர்களுக்கு இந்தப் பிண்டத்தைக்கொடுக்கிறேன்.

𑌦𑌾𑌵𑌦𑌾𑌹𑍇 𑌮𑍃𑌤𑌾 𑌯𑍇 𑌚 𑌸𑌿𑌂𑌹𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌹𑌤𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇 ।
𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌿𑌭𑌿𑌃 𑌶𑍃𑌙𑍍𑌗𑌿𑌭𑌿𑌃 𑌵𑌾𑌪𑌿 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

எவர்கள் காட்டுத்தீயில் அகப்பட்டும், சிங்கம், புலி, கோரப்பல்லு, கொம்புகள் உள்ள ம்ருகங்களால் மரணமடைந்திருக்கிறார்களோ அவர்களின்பொருட்டும் இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌉𑌦𑍍𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍃𑌤𑌾 𑌯𑍇 𑌚 𑌵𑌿𑌷𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌹𑌤𑌾𑌶𑍍𑌚 𑌯𑍇 ।
𑌆𑌤𑍍𑌮𑍋𑌪𑌘𑌾𑌤𑌿𑌨𑍋 𑌯𑍇 𑌚 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ।

சுறுக்குப்போட்டுக்கொண்டு மரணமடைந்தவர்கள் என்ன, விஷம் தின்று ஆயுதங்களால் வெட்டுப்பட்டு தற்கொலை பண்ணிக்கொண்டு மரணமடைந்தவர்கள் என்ன, இவர்களின் பொருட்டு இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌅𑌰𑌣𑍍𑌯𑍇 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌿 𑌵𑌨𑍇 𑌕𑍍𑌷𑍁𑌧𑌯𑌾 𑌤𑍃𑌷𑌯𑌾 𑌹𑌤𑌾𑌃 ।
𑌭𑍂𑌤𑌪𑍍𑌰𑍇𑌤𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

காட்டிலும், வழியிலும், ஜலத்திலும், பசியாலேயாவது, தாகத்தாலேயாவது மரணமடைந்தவர்கள், பூதம், ப்ரேதம், பிசாசங்கள் இவைகளுக்குப் பயந்து

மரணமடைந்தவர்கள் எவர்களோ அவர்களின்பொருட்டும் இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌰𑍌𑌰𑌵𑍇 𑌅𑌨𑍍𑌧𑌤𑌾𑌮𑌿𑌸𑍍𑌰𑍇 𑌕𑌾𑌲𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌚 𑌯𑍇 𑌗𑌤𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

ரௌரவம், அந்ததாமிஸ்ரம், காலஸூத்ரம் என்றும் சொல்லப்பட்ட இருபத்தொரு நரகத்தில் மூன்றுன நரகத்தை எவர்கள் அடைந்திருக்கிறார்களோ, அவர்கள் நல்லகதியை அடையும்பொருட்டு இந்தப் பிண்டத்தைக கொடுக்கிறேன்.

𑌅𑌸𑌿𑌪𑌤𑍍𑌰𑌵𑌨𑍇 𑌘𑍋𑌰𑍇 𑌕𑍁𑌮𑍍𑌭𑍀𑌪𑌾𑌕𑍇 𑌚 𑌯𑍇 𑌗𑌤𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

எவர்கள் கூர்மையான கத்தி நெடுகவைக்கப்பட்ட அஸிபத்ரவநம் என்ற நரகத்துக்கும், துஷ்டர்களைச் சூளையில் போட்டு எரிக்கும் கும்பீபாகமென்ற நரகத்துக்கும் போயிருக்கிறார்களோ அவர்களுக்கு நல்லகதி உண்டாவதற்காக இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌅𑌨𑍇𑌕𑌯𑌾𑌤𑌨𑌾𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑍇𑌤𑌲𑍋𑌕𑌂 𑌚 𑌯𑍇 𑌗𑌤𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

எவர்கள் அவர்கள் செய்த கொடிய பாபங்களுக்குத் தண்டிக்கப்படுவதற்கு தண்டனைக்குத் தகுதியான புதுப்புது சரீரங்களை இன்னும் எடுத்துக்கொண்டிருக்கிறார்களோ, எவர்கள் ப்ரேத லோகத்துக்குப் போயிருக்கிறார்களோ அவர்கள் நல்லகதியை அடையும் பொருட்டு இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌅𑌨𑍇𑌕𑌯𑌾𑌤𑌨𑌾𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌃 𑌯𑍇 𑌨𑍀𑌤𑌾 𑌯𑌮𑌕𑌿𑌙𑍍𑌕𑌰𑍈𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

எவர்கள் தண்டனை அடையத் தகுதியான சரீரத்தை அடைந்து தண்டனைக்கு யமபடர்களால் அழைத்துக்கொண்டு போகப்படுகிறார்களோ, அவர்கள் நல்லகதியை அடையவேண்டியதற்காக இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌨𑌰𑌕𑍇𑌷𑍁 𑌸𑌮𑌸𑍍𑌤𑍇𑌷𑍁 𑌯𑌾𑌤𑌨𑌾𑌸𑍁 𑌚 𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌇𑌮𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

எவர்கள் யாதனு சரீரத்தைக் கொடுக்கப்பட்டவர்களாய் எல்லாவிதமான (21) நரகங்களில் தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் நல்லகதியை அடையவேண்டியதற்காக இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.



𑌪𑌶𑍁𑌯𑍋𑌨𑌿𑌗𑌤𑌾 𑌯𑍇 𑌚 𑌪𑌕𑍍𑌷𑌿𑌕𑍀𑌟𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌾𑌃 ।
𑌅𑌥𑌵𑌾 𑌵𑍃𑌕𑍍𑌷𑌯𑍋𑌨𑌿𑌸𑍍𑌥𑌾𑌃 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

எவர்கள் தாங்கள் செய்த பாபத்தினால் ம்ருகங்களாயும், பறவைகளாகவும், புழுக்களாகவும், பாம்புகளாகவும், மரங்களாகவும் ஜன்மம் எடுத்திருக்கிறார்களோ அவர்களின் பொருட்டு இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌜𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌷𑍁 𑌭𑍍𑌰𑌮𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ।
𑌮𑌾𑌨𑍁𑌷𑍍𑌯𑌂 𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌂 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

தாங்கள் செய்த பாபத்தாலே ஆயிரக்கணக்கான பிறவியில் பிறந்து கஷ்டப்பட்டுக்கொண்டு, மனித ஜன்மம் எடுப்பதே அரிதாய்ப்போன ஜீவாத்மாக்களின் பொருட்டு இந்தப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌦𑌿𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌭𑍂𑌮𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌦𑌯𑌃 ।
𑌮𑍃𑌤𑌾 𑌅𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾 𑌯𑍇 𑌚 𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑌿𑌣𑍍𑌡𑌂 𑌦𑌦𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

ஆகாசம் பூமி இந்த இரண்டுக்குள் நடுப்பிரதேசத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிற பித்ருக்கள் என்ன, பந்துக்களாயிருந்து செத்துப்போய் ப்ரேதகார்யம் ஒன்றுஞ்செய்யப்படாமலிருக்கிறவர்கள் என்ன, அவர்களின் பொருட்டுப் பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

𑌯𑍇 𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌤𑌰𑍂𑌪𑍇𑌣 𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌮𑌮 ।
𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑍁 𑌪𑌿𑌣𑍍𑌡𑍇𑌨𑌾𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 ॥

எந்த என்னுடைய பித்ருக்கள் ப்ரேத ரூபத்தைவிட்டு மாறவில்லையோ, நான் இப்போது கொடுக்கும் பிண்டத்தினாலே அவர்கள் எல்லோரும் த்ருப்தியை அடையட்டும்.

𑌯𑍇𑌽𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾 𑌵𑌾 𑌯𑍇𑌽𑌨𑍍𑌯𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌃 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌿𑌣𑍍𑌡𑍋 𑌮𑌯𑌾 𑌦𑌤𑍍𑌤𑍋 𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌯𑍍𑌯𑌮𑍁𑌪𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍁 ॥

எவர்கள் எனக்கு உறவினரல்லாதவர்களானாலும், உறவினரானாலும், முன் வேறு ஜன்மத்தில் உறவினராக இருந்தார்களோ அவர்களின் பொருட்டு இந்தப் பிண்டம் கொடுக்கப்பட்டது. அவர்கள் நல்லகதியை அடையட்டும்.

𑌪𑌿𑌤𑍃𑌵𑌂𑌶𑍇 𑌮𑍃𑌤𑌾 𑌯𑍇 𑌚 𑌮𑌾𑌤𑍃𑌵𑌂𑌶𑍇 𑌚 𑌯𑍇 𑌮𑍃𑌤𑌾𑌃 ।
𑌗𑍁𑌰𑍁𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌾𑌂 𑌯𑍇 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾 𑌮𑍃𑌤𑌾𑌃 ॥
𑌯𑍇 𑌮𑍇 𑌕𑍁𑌲𑍇 𑌲𑍁𑌪𑍍𑌤𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌦𑌾𑌰𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ।

க்ரியாலோபகதாஶ்சைவ ஜாத்யந்தா: பங்கவஸ்ததா ||
விரூபா ஆமகர்பாஶ்ச ஜ்ஞாதாஜ்ஞாதா: குலே மம |
தேஷாம் பிண்டோ மயா தத்தோ ஹ்யக்ஷய்யமுபதிஷ்டது ||

என் தகப்பன் வம்சத்தில் இறந்தவர்கள் என்ன, என் தாய் வம்சத்தில் இறந்தவர்கள், ஆசார்யன், மாமனுர், பந்துக்கள் இவர்களுடைய மற்ற பந்துக்கள் என்ன, பிள்ளை பெண்டாட்டி இல்லாமல் இறந்து பிண்டம்போட நாதனில்லாமல் என் குலத்தில் போயிருக்கிறவர்கள் என்ன, என் குலத்தில் பிறந்து எவர்களுடைய ப்ரேதக்ருத்யத்தில் மந்த்ர, த்ரவ்ய, க்ரியா, நியமம் முதலான குறைவு நேர்ந்திருக்கிறதோ அப்பேர்க்கொத்தவர்கள் என்ன, என் குலத்தில் பிறந்து பிறவிச்செவிடாயும், நொண்டிகளாகவும், குரூபிகளாகவும், ஆமகர்ப்பத்தை உடையவர்களாகவும், தெரிந்தும், தெரியாமலும் மரணமடைந்திருக்கிறுர்களோ அவர்களின் பொருட்டு என்றல் இப்போது பிண்டம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் நல்லகதியை அடையட்டும்.

ஆப்ரஹ்மணோ யே பித்ருவம்ஶ ஜாதா: । மாதுஸ்ததா வம்ஶபவா மதீயா: ।
குலத்வயே யே மம தாஸபூதா: । ப்ருத்யாஸ்ததைவாஶ்ரித ஸேவகாஶ்ச ।
மித்ராணி ஶிஷ்யா: பஶவஶ்ச வ்ருக்ஷா: । த்ருஷ்டாஹ்ய த்ருஷ்டாஶ்ச க்ருதோபகாரா: ।
ஜந்மாந்தரே யே மம ஸங்கதாஶ்ச । தேப்ய: ஸ்வதா பிண்டமஹம் ததாமி । [காரா:]

என்னுடைய பிதாவினுடைய வம்சத்தில் ப்ரும்மா முதல் இன்றுவரை ஜனித்து மறித்தவர்கள் எல்லாருக்கும், என் தாயார் வம்சத்தில் இதுவரை பிறந்து மறித்தவர்கள் எல்லாருக்கும், என்னுடையவும் என் தாய்வம்சத்தைச் சேர்ந்த அடிமைகளாகயிருந்தவர்கள், வேலைக்காரர்கள், ஆச்ரிதர்கள், ஸேவகர்கள், ஆச்ரிதர்களின் ஸேவகர்கள், ஸ்நேஹிதர்கள், சிஷ்யர்கள், பசு முதலான ம்ருகங்கள், மரங்கள் முதலிய செடிகொடிகள் இவர்கள் என்ன இவர்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் உபகாரம் செய்தவர்கள், ஜன்மாந்தரத்தில் என்னைச்சேர்ந்தவர்களாகயிருந்தவர்கள், இவர்களெல்லாருக்கும் நான் இந்த ப்பிண்டத்தைக் கொடுக்கிறேன்.

இந்தக் கயையில் பிண்டதானத்தின் மஹிமை இவ்வளவு இருப்பதினுலன்றோ ஸ்ரீராமன் சித்ரகூடபர்வதத்தில் பரதன் வந்து தன்னைத் திரும்பிவர அழைக்கும்போது, நான் காட்டுக்குத்தான் போவேன், நீ பட்டணத்துக்குப்போய் ராஜ்யபாரம் பண்ணிவா என்று பரதனை வற்புறுத்தித் திரும்பிப்போகும்படி சொல்லும்போது 'ஏஷ்டவ்யா பஹவ: புத்ரா: குணவந்தோ பஹுஶ்ருதா: । தேஷாம்சைவ ஸமவேதாநாம் யத்யேகோ(அ)பி கயாம் வ்ரஜேத்' (ஒருவன் அநேக குணமுள்ளவர்களும் வேதாத்யனம் செய்தவர்களுமான பிள்ளைகளைப் பெறுவதற்கு ஆசைப்படவேண்டும்; அவ்வளவு பிள்ளைகளில் எவனுவது ஒருவன் கயைக்குப் போகமாட்டானு) என்று பெரியோர்கள் சொல்லும் பாசுரத்தைக் காரணமாக எடுத்து நிரூபித்து அயோத்யாவுக்குப் போய்ப் பித்ருகார்யங்களை நடத்து என்று ஆஜ்ஞையிட்டார். எவனொருவன் கயைக்குப்போய் பிண்டதானம் செய்கிறுனே அவனைத்தான் பித்ருக்கள் தங்கள் ஸந்ததியில் சரியாய்ப் பிறந்தவனுக நினைக்கிறுர்கள். நன்றுய் ஸாகுபடி செய்யப்பட்ட நிலத்திலிருந்து எப்படிக் குடியானவர்கள் தான்யங்களை யதேஷ்டமாய் அடைகிறுர்களோ அதுபோலப் பிதிருக்கள் இவனுக்கு ஏராளமான அநுக்ரஹத்தைச் செய்கிறுர்கள். 'ஏஷ்டவ்யா பஹவ: புத்ரா: யத்யேகோ(அ)பி கயாம் வ்ரஜேத்' என்னும் ப்ரமாணம் வஸிஷ்ட ஸ்மிருதி 85, 4, 66, 67-லும், விஷ்ணு ஸ்ம்ருதியில் 85 அத். 67 ஸூத்ரத்திலும், வாராஹ புராணத்திலும், ஸ்ரீமஹாபாரதத்தில் ஆநுசாஸன பர்வத்தில் 135 அத். 14-ச்-லும் எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த மந்தரங்களின் அர்த்தத்தைக் கவனித்துப் பார்த்தால் ஜீவாத்மாக்கள் அவரவர் செய்த பாபத்தால் மரமாகவோ, செடியாகவோ, கொடியாகவோ, புழுவாகவோ பிறக்கிறதையும், ஜன்மத்திஞலுண்டாகும் துக்கம் எவ்வளவு என்பதையும் வ்யக்தமாய் அறிந்துகொள்ளலாம். நம் மதப்ரவர்த்தகர்களுடைய ஸர்வபூத ஹிதத்வமும் க்ருதஜ்ஞதையும் எவ்வளவு என்று இதனுல் ஸ்பஷ்டமாகவில்லையா. இப்படியிருக்க, ப்ராஹ்மணர்கள் ஸ்வயநலம் பாராட்டுகிறவர்கள், பிறருக்கு அவர்களாலுதவியில்லை, தங்களாத்மாவைத் தாங்கள் காப்பாற்றிக்கொள்ளுகிறவர்கள் என்று வீண் அபவாதம் சொல்லுகிறவர்கள் இந்த மந்த்ரங்களின் அர்த்தத்தை நன்கு உணர்ந்து பார்த்தால் தாங்கள் க்ரஹித்தது சரியில்லை என்று அனுசயித்து வருத்தப்படுவார்கள். இப்படி ஸர்வபூத ஹிதத்தைத்தேடும் ஹிந்துக்களின் மஹிமையை எவ்வளவு என்று சொல்லி முடியும்.



## முதலாழ்வார்கள்.

(ஸ்ரீ. உ.ப. வே. கோமடம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார்.)

துலாமீ என்று சொல்லப்பட்ட ஐப்பசிமீ மிகவும் விசேஷமான மஹிமையையுடையது. இதில் காவிரிஸ்நானம் செய்பவர்களுக்கு விசேஷ பலம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவர்களான நமக்கு இந்த மாதம் மற்றவர்களைவிட விசேஷமாக கௌரவிக்கத்தக்கது. ஏனெனில் இந்த மாதத்தில் அன்றோ நம் ஸம்ப்ரதாயத்திற்கு அஸாதாரணமான ஆழ்வார்கள் பன்னிருவர்களில் முதன்மையர்களான முதலாழ்வார்கள் அவதரித்தருளினது. அவர்

ர்களுடைய அவதார க்ரமத்தையும், அவர்கள் நமக்குச் செய்தருளி இருக்கும் உபகாரத்தையும் பராமர்சிப்பது மிகவும் அவச்யமாகும்.

## அவதாரிகை.

ஸ்ரியஃ பதியான எம்பெருமான் ஸ்ரீகண்ணனாயவதரித்து அர்ஜுநனை வ்யாஜ்யமாக வைத்துக்கொண்டு ஸ்ரீகீதோபதேசம் செய்தருளின பொழுது 'தர்மத்திற்குக் குறைவு வந்து அதர்மத்திற்கு ஆதிக்யம் எப்பொழுது வருகிறதோ அப்பொழுதும், ஸாதுக்களைப் பரித்ராணம் செய்வதற்கும், துஷ்டர்களை நிக்ரஹம் செய்வதற்கும், தர்மத்தை ஸ்தாபிப்பதற்கும் அடிக்கடி அவதரிக்கிறேன்' என்று தான் அவதாரம் செய்யும் காலத்தைக் குறித்தான்.

ஆதியில் இந்த அண்டத்தை ஸ்ருஷ்டித்து, அதில் ப்ரும்மாவைத் தம்முடைய நாபீகமலத்தில் உத்பவிக்கும்படிசெய்து, அவருக்கு மேல் ஸ்ருஷ்டியை நடத்துவதற்காக சட்டபுஸ்தகம்போன்ற வேதங்களை உபதேசித்தருளினான். ரஜஸ்தமோகுணங்களின் அவதாரம் என்னலான மதுகைடபர்கள் அந்த வேதங்களை அபஹரித்துக்கொண்டு போனதும் ப்ரும்மா கருணை இழந்த கணக்கன்போலே ஒன்றும் தெரியாமல் திகைத்து நின்று பகவானை ஸ்தோத்திரம் செய்ய, அவரும் ஸ்ரீஹயக்ரீவ அவதாரம் செய்து வேதங்களை மீட்டுக்கொடுத்தருளினான். வேதங்கள் குயுக்திகள் கையில் அகப்பட்டுக்கொண்டு அவர்கள் தங்கள் இஷ்டப்படி அபார்த்தங்கள் சொல்ல ஆரம்பித்ததும் தானே ஸ்ரீராமக்ருஷ்ணாத்யவதாரங்களை எடுத்துக்கொண்டு வேதங்களுக்கு அர்த்தம் இதுதான் என்று தானே வெளியிட்டருளினான். அப்பொழுதும் இருள்தரு மாஞாலத்தில் ஜனங்கள் அவற்றை டாம்பிகனுடைய வார்த்தையாகக் கொண்டு நம்பவில்லை. இதைப்பார்த்துப் பகவான் 'ஐயோ! ஸம்ஸாரத்தில் மூழ்கி இப்படி கஷ்டப்படுகிறார்களே! மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைய ஸ்வரூபத்தில் பாத்யதையை உடையவர்களாயிருந்தும், நாம் நம்மை அடைந்து ப்ரார்த்தித்தால் அதைத் தருவதற்கு ஸத்யஸங்கல்பனாய் இருந்தும் அடைந்து ப்ரார்த்திக்காமல் நிற்கிறார்களே!' என்று மிகவும் வருந்தி, க்ருபையினால் ஏவப்பட்டவனாய் தான் ஸர்வேச்வரன் என்று சொல்லிக்கொண்டு போனது தவறு, ஜனங்களுடன் ஸஜாதீயராய் அவதரித்து அவர்களுக்கு உபதேசித்தால் தான் பயன்படும் என்று பார்த்து, இந்த லோகத்தில் மனுஷ்யர்களாக அவதரிக்கும் படிக்கும், ஸகல மனுஷ்யர்களுடன் கூட இருந்து உபநிஷத்துக்களில் ஸர்வபந்த நிவாரணார்த்தமாக மிகவும் ரஹஸ்யம் என்று உபதேசிகப்பட்டிருக்கும் ப்ரபத்தி மார்க்கத்தையும் அதற்கு அத்யாவச்யகமான ரஹஸ்யத்ரயங்களையும் உபதேசிக்கும் படிக்கும் தம்முடைய நித்ய ஸூரிகளில் சிலரை ஆஜ்ஞாபித்தான்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீஃ

# ஸ்ரீதேசிகாபிமான விசேஷம்.

(முன் தொடர்ச்சி.)

இவருடைய இந்திரியங்களும், '[illegible] [illegible]' என்கிறபடியே ஸ்ரீ தேவநாதனுடைய ப்ரத்யவயவ ஸௌந்தர்ய பாஹுள்யத்தில் ஈடுபட்டதை ஸூசிப்பித்து, மேல் பல ஸ்லோகங்களினால் ஒவ்வொரு அவயவத்தையும் தனித்தனியே அநுபவித்தருளினார். இப்படிப்பட்ட அநுபவவிசேஷம் மற்றொரு எம்பெருமான் விஷயத்திலும் இல்லை. எல்லாத் திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களும் அந்தப் பரவாஸுதேவனுடைய அப்ராக்ருத திருமேனியினால் அந்தஃப்ரவிஷ்டர்கள் என்பது ப்ரமாணஸித்தமானபோதிலும், நாம் இந்த லோகத்தில் ஒரு அர்ச்சாவதார எம்பெருமானிடத்தில் ஆத்மரக்ஷண பரத்தை ஸமர்ப்பிவித்துவிட்டு, தேஹாவஸானத்தில் பரமபதநாதனிடம் சென்றால், அவன் ஒரு கால் நம்மை அறியாமல் நீர் யாரிடத்தில் பரஸமர்ப்பணம் செய்தீரோ அவரைப்போய்க் கேட்டுக்கொள்ளும் என்று சொல்லிவிட்டால் நாம் என் செய்வது என்கிற ஸந்தேஹம் நம் போலியர்களுக்கு உண்டாகலாமாகையினால் அதை நிராகரிப்பதற்காக ஆழ்வார் 'அவன் இவன் என்று கூழேன்மின் நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல்வண்ணனே' என்றருளிச்செய்தாப்போலே, அதாவது அந்தப் பரமபதநாதன் இந்த அர்ச்சாரூபியானவன் என்று ஸந்தேஹப்படவேண்டாம், இந்த அர்ச்சாரூபியானவனே அந்தப் பரவாஸுதேவன் என்று தேறியிருங்கள், ஆகையினால் நாம் எந்த அர்ச்சாரூபியான பரமபதநாதனிடத்தில் நம்முடைய பரத்தை ஸமர்ப்பித்தோமோ அவனே அங்கு அந்தப் பரமபதநாதனாகையினால் நாம் கூசாமல் அவனை அணுகலாம் என்றருளிச்செய்து ஸந்தேஹத்தை நிவ்ருத்தி செய்தருளினாப்போலே இவரும் இந்த ஸ்ரீதேவநாதனாகிய அர்ச்சாரூபியே பரமபதநாதன் என்று ஸூசிப்பித்திருக்கிறார். அதாவது பரமபதஸோபானத்தில் பரமபதநாதனை முக்தன் அநுபவிக்கும் ப்ரகரணத்தில் திவ்ய அவயவ வர்ணனமெல்லாம் இந்த ஸ்ரீதேவநாதன் விஷயத்தில் இவர் அநுஸந்தித்திருக்கிற ப்ரகாரமாகவே அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. உதாஹரணமாக, '[illegible] ஸாயுஜ்யத்தாலே சேர்ந்ததென்னலாம்படி கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியைப் பார்த்து 'முடிச்சோதியாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ' என்பது' என்று

பரமபத ஸோபானவாக்யம், ‘ ஸநீக்ருத த்ரைலோக்ய பிம்ப ஸஹஸ்ர தாம்யாம் ’ என்றும், ‘ ஶ்வஸ்ய ஸ்வஸ ஸ்மர கர்ணைஞ காஞ்சிராஜ ’ என்றும், ‘ சைவதாஸ்ய ஸௌஸரி ஶிநகாரஸ்யலஸித: தவநிகாரஹாராநுகார: । ஸ்வயமி த வடநாராகம் ஸத்யம் ஸ்நாவயதி யாஸஸத்ய ஸஹ்ராம் ॥’ என்றும் ஸ்ரீதேவநாதன் விஷயமான அநுபவம். இப்படியே, ‘ ஸஷ்டீவதே அநு கரிக்கிற திருநெற்றியை’ என்பதையும், ‘ஸ்யாகியஸக்ஷிஶியம் ரஜநீகரேண ஸக்ஷீஸ்ஸீ ராஸராவதேஸவதாஸராதே’என்பதையும்,‘ஜநநவதவீஜஸ்ரா ரை முன்னேடிவந்து விலக்கக்கடவனவான ஶிவ்யஜ்ஜா காணங்களைக் கண்டு கநவஸ்கா ஹஸகஸாதி கண்ணீர ஶாத்ரதெ என்னலாம்படி கணைக்கால் இருந்தவாவென்பது ’ என்பதையும், ‘ ஷகுதேத்ர ஷகவஹாரணே வ்ரஜ ஸநரீணாம் தேத்யாந யாவநவியாவஷி ஸ்யஸாஹ்யம் । கநவஸ் காஸஸமிஷஜஸஸாதிகாஸம் ஜஜாயஹம் ஜயதி தேவவதே ஸவீயம் ॥’ என்பதையும் பராமர்சிக்குங்கால் கீழ்ச்சொன்ன அர்த்தம் ஸ்பஷ்டமாக ஏற்படும். இப்படி ஸ்ரீதேவநாதனுடைய ப்ரத்யங்க பூர்ணமான ஸௌஷ்டவத்தை யும், ஸமுதாயசோபாதிசயத்தையும் பரக்க அநுஸந்தித்து உபஸம்ஹாரத்தில், ‘ஶோஸதே ஸத்யவாதீ ’ என்று வர்த்தமான நிர்தேசமாய் அருளிச்செய்தி ருப்பதினுல் இவர் இப்பொழுதும் இந்த இடத்தில் ஸாந்நித்யம் பண்ணிக்கொ ண்டிருக்கிருர் என்பது ஏற்படுகிறது.

இப்படி ஸ்ரீதேவநாதனுடைய திவ்யவடிவழகில் ஈடுபட்டு அதை அநு பவிக்க இழிந்த இவருடைய அபிநிவேசம் பக்தி ப்ரகர்ஷத்தாலே ச்ருங்கார மாய் பரிணமிக்க சிந்தைகவர் ப்ராக்ருதமான அச்யுத ஶதகம் என்னும் ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ தேவநாதனை ஒரு நாயகனுயும், தம்மை ஒரு பார்யையாகவும் பாவித்து அநுபவித்தருளினுர் என்கிற அர்த்தம் இவர் தம்மாலேயே இந்த க்ரந்தத்தின் கடைசியில் ‘ நதஸத்ய வக்ஷணாநீதஶஸிதகிராதஹ்ர நிஜகஶார த்வநரவ: । ஸவிஷ்ணுஷ்ணவநவயம் வர ஜவ ஶம் ஸஹஸ ஶஜ்ஜி ஜந விஜ்ஞாவிதம் ॥’ என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த பாவமே முதிர்ந்து வளர்ந்து செல்ல செந்தமிழ் மும்மணிக்கோவை என்னும் ப்ரபந்தத்தில் நாயகனுடைய பிரிவினுல் நாயகிபடும் பாட்டை விஸ்தாரமாக அருளிச் செய்தார்.

‘ ஆர்க்கும் கருணை பொழிவான் அயிந்தையில் வந்தமர்ந்த கார்க்கொண் டலைக்கண்ட காதல்புனமயிற் கண்பனியா வேர்க்கும் முகிழ்க்கும் விதிர் விதிர்



க்கும் வெள்கி வெவ்வுயிர்க்கும் பார்க்கின்றவர்க்கு இது நாம் என்கொல் என்று பயிலுவமே’ என்றிறே இவர் அருளிச்செய்திருப்பது. பார்க்கின்றவர்க்கு— உள்ளோடுகிற தசை இன்னதென்று அறியாமல் பாஹ்யவ்யாபாரங்களை மாத்திரம் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு, இவளுடைய நோய் விரஹநோய் என்றறியாதவர்களுக்கு. ச்ருங்கிபேரபுரத்தில் சக்ரவர்த்தித் திருமகன் பிராட்டியுடன் தரையில் சயனித்துக்கொண்டிருந்தார் என்கிற வ்ருத்தாந்தத்தைக் குஹப்பெருமாள் சொல்லக்கேட்டதும், ஸ்ரீராமனுடைய விரஹத்தால் பரதாழ்வான் மூர்ச்சையாக அருகில் இருந்தவர்கள் அவருடைய உள்ளோடும்தசையை அறியாமல் வெளிதசையைமாத்திரம் பார்த்து ‘ உனக்கு என்னவ்யாதி ’ என்று கேட்டாப்போலே, இங்கும் வெளி நிலையைப் பார்த்துக்கேட்கிறவர்களுக்கு என்னவென்று சொல்லுவது. இப்படிப்பட்ட தசையையே யன்றே மஹர்ஷிகள் ஸ்தோத்திரம் பண்ணிப் போந்தார்கள். ‘ வரஶாவஷ ஶாவஹோ ஶந ஸாதிஜய ஜூரிம்’ என்று கஜேந்திராழ்வானுடைய ஆபத்துக் கொண்டாடப்பட்டதிறே. சக்ரவர்த்தித் திருமகனை விட்டுப்பிரிந்த வ்யஸனுதிசயத்தால் தற்கொலைப் பண்ணிக்கொள்ளத் துணிந்த பிராட்டியை அந்த ஸமயத்திலும் ‘ ஸுதிஷ்டிதாம்’ என்ருன் மஹரிஷி. ஆகையினுல் இவள் பிரிந்து வ்யஸனப்படும் விஷயத்தின் பெருமை அறியாதவர்களுக்கு இவளுடையஇந்த உத்தமமான ஸ்திதியை என்னென்று சொல்லுவது, அது வாக்குக்கு நிலமல்ல என்றபடி.

இப்படிப் பகவானை விட்டுப் பிரிந்த சோகாதிசயத்தினுல் துடித்தாலும் அந்த ஸ்ரீதேவநாதனே எழுந்தருளி க்ருபை பண்ணவேண்டுமே யன்றி அதற்காக வேறு உபாயாந்தரங்களில் அந்வயிக்க இஷ்டமில்லாதவராய் நின்றுர். பிராட்டியின் சோகாதிசயத்தைக் கண்ணுற்ற திருவடி அதைப்பொறுக்க சக்தி யற்றவராய் தன்னுடைய முதுகில் ஏற்றிக்கொண்டுபோய் அதிசீக்கிரத்தில் ஸ்ரீராமனிடம் சேர்த்துவிடுகிறேன் என்று விஜ்ஞாபனம் செய்ய, பிராட்டி ‘ ராவணன் செய்த கார்யத்தை நாமும் செய்யவோ, பகவானுடைய க்ருத்யத்தைச் செய்து அவனுடைய பெருமையைக் குறைக்கவோ, ‘ ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந: । மாம் நயேத்யதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத் ॥’ என்கிறபடியே ராக்ஷஸர்கள் நிறைந்த இந்த லங்கை முழுவதும் தம்முடைய பாணங்களினுல் நிறைந்திருக்கும்படி செய்து ஸ்ரீராமன் என்னை நேரில் அழைத்துச்சென்ருல் அது அவருக்கு ஸத்ருஶமாகும் என்று பதில் அருளிச்செய்தாப்போலே இவரும் தமக்கு க்ருபை செய்யுமிடத்தில் ‘ அருளும் தெருளும் தாளன்பால் அடியோர்மெய்ய வந்த

186745.

ருளே' என்கிறபடியே ஸ்ரீ தேவநாதனுகவே (அடியோர் மெய்யனுகவே) வந்தருளவேணும், வேறு வ்யக்தி விசேஷமாய் வரக்கூடாது என்றனுஸந்தித்தருளினர். ஆழ்வாரும் 'உன்னலல்லால் யாவராலு மொன்றும் குறைவேண்டேன்' என்றருளிச்செய்தார். திருவடியும் 'பாவோ நாந்யத்ர கச்சதி' என்கிறபடியே ஸ்ரீராமனைத்தவிர மற்ற அவதாராந்தரத்தில் ஈடுபடாமல் நின்ருரிறே. அதைப்போல இவரும் ராத்தாந்த ஸித்தாந்தியாகையினுல் தமக்குப் பர்த்தாவாக ஸ்ரீ தேவநாதனை வரித்தபிறகு மற்ற திவ்யதேசத்து எம்பெருமான்களை நினைப்பதும் தம்முடைய பாரமைகாந்த்ய நிஷ்டைக்கும் பதிவ்ரதா தர்மத்திற்கும் விரோதமாகும் என்று திருவுள்ளம்பற்றியருளினர். ஆழ்வாரும் 'ஜகதாகாரனுனபடி யன்றியே நீயானபடியே வந்து சூழ்ந்தாய், என்னுடைய மனோரதம் ஒருபடியே முடிந்தது' என்றனுபவித்ததாகப் பிள்ளானும் வ்யாக்யானம் பண்ணியருளினர். இப்படி இவர் இதர தேசத்து எம்பெருமான்களையும் மறந்தார் என்பதும் இவர் தம்மாலேயே 'பற்பில் மறந்தசெய்யாள் படிகாட்டிய பண்புடைய எம் விற்புருவக்கொடிகோர் விலங்காமயல் பெற்றனமே' என்றருளிச்செய்யப்பட்டிருக்கிறது. அதாவது பிராட்டி பகவானுடைய திருமார்பின் ஸௌஷ்டவத்தில் ஈடுபட்டுத் தன்னுடைய ஜனனபூமியான தாமரைப் புஷ்பத்தையும் மறந்தாப்போலே இவரும் ஸ்ரீ தேவநாதனுடைய வடிவழகில் ஈடுபட்டு தம்முடைய ஜனன பூமியான காஞ்சீபுரத்தையும் மறந்தார். அதாவது 'வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:' என்று அருளிச்செய்த இவரை அந்த ஜன்ம பூமியையும் மறக்கும்படி செய்து 'அடியோர் மெய்யவந்தருளே' என்கிறபடியே ஸ்ரீ தேவநாதனைத்தவிர மற்ற எம்பெருமான்களினுடைய அனுக்ரஹம் தமக்கு வேண்டியதில்லை என்று சொல்லும்படி யன்றே பண்ணிற்று என்றபடி. ஆழ்வார் 'இங்கே திரிந்தேர்க்கு இழுக்குற்றென்' என்கிறபடியே இந்த ஸம்ஸார மண்டலத்திலேயே பாகவதபக்தி செய்யும்படி லபிக்கப்பெறில் ஸ்ரீவைகுண்டம் நமக்கு வேண்டியதில்லை என்றுப்போலேயும், ஆரம்பத்தில் ப்ரபத்தி பண்ணினுலும் பகவான் திருவாய்மொழி முடிந்தபிறகே மோக்ஷம் கொடுத்தாப்போலேயும், இவரும் 'ஸக்தா: தாவக ஸேவா ரஸஸரிதா ஸ்வகரக்ஷணோத்கண்டா: ஸ்வயம் | கருணாநிதி யாரயந்தி சிரம் காங்க்ஷித மோக்ஷா அபி அஸ்யாம் ஸ்தாபிதா:' என்கிறபடியே பரமபதத்தில் உண்டாகக்கூடிய ஆநந்தமும் இந்த ஸ்ரீதேவநாதனை அனுபவிப்பதில் தமக்கு உண்டாயிருந்ததினுல் இந்த வடிவழகிலேயே ஈடுபட்டு மோக்ஷத்தை அடைவதிலும் இந்த ஸ்ரீதேவநாதனுடைய அனுபவமேவேண்டும் என்று ப்ரார்த்தித்தாராயிற்று. இதைத்தான் 'ஓர் விலங்கா மயல்' என்றருளிச்செய்திருப்பது. விலங்கு - நிகளம், அதாவது தன்னிஷ்டப்படி ஸஞ்சரிப்பதற்குத் தடையானது. 'ஸம்ரக்ஷணீயதமாயி பவேத் கதேபவ தீர்க்கம் ப்ரயாதமபி தவச்வஜனாபவாஸம் | ஸுக்ஷ்மஷ்வாநிதி ஸவா நதநாகம்வேதாந: ஸுத்ரா நாவஸக்த நிக்ஷேதம் ஸ்வயம் தேவ' என்கிறபடியே எவ்வளவு தூரம் ஓடிப் பறந்தாலும் கடைசியில் கட்டுத்தறியில் வந்துநிற்கும் பறவைபோலே தமக்கு வேறு எந்த இடத்திலும் மனது பொருந்தாமை விவக்ஷிக்கப்படுகிறது. 'அமுதினைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணுவே' என்கிறபடியே வேறொன்றிலே செல்லாதபடி தம்முடைய திருவுள்ளத்தைத் தன்னிடத்திலேயே கட்டிவைத்திருக்கக்கூடிய மயல் என்று தாத்பர்யம். 'ப்ரத்யுஜ்வல ப்ரணய ஸௌஷ்டவ ஸம்மோஹம் ஸந்தோஷ த்ருஷ்ணா த்ருசோ விஹாயநாய ந த்ருப்யதோ மே', "ஸுகுமாரமஹி ப்ருஷ்டம் ருசம் பரிஷ்வதே ய:", 'பிம்பாதரம் விகஸ்வர பங்கஜ லோசனம் தே.......................லாவண்யம் விஷயதி தேவ வததேஹீயா' என்றிறே இவர் திருவுள்ளத்தை ஸ்ரீ தெய்வநாயகன் வடிவழகு கவர்ந்தபடி. இத்தை கணிசித்துப் பின்புள்ளாரும், 'ஸுஜாத ஜநமஸம்பாவ்ய ஹரோ ரஹித தாஸ்யே | ஸுஹ்ருத் நமோ வஸ்துகோபீ ஸக்ஷ வஸ்தாராநு பஹுநு || விஹரவரஸரித்ர ப்ரதாவரமாஹா விபவ்யவதீம் ப்ரணதநு ஜிதநிதநஸ்ஸ | நூவ ஸ்ஸ திஸவம் ஹணீந்த்ர வயப்ராம் நிமதகிரீட விசார நீதகாலா:' என்றனுஸந்தித்தார்கள். 'விலக்கா' என்பது மெலிந்து 'விலங்கா' என்றாய் அதற்கு ஒருவராலும் நிவர்த்திக்கமுடியாத என்றும் பொருளாகக்கடவது. அதாவது ஹிதம் சொல்லுகிற தாய்மார் தோழிமார் முதலியோராலும் விலக்கமுடியாத என்றபடி. உம்மை ஆச்ரயித்தவர்களுக்கு புண்யபாபங்களாகிற இரண்டு விலங்குகளும் விநஷ்டமாகாநிற்க அதைக்காட்டிலும் ப்ரபலமானதாய் அநிவர்த்தநீயமாய் மோக்ஷகமன விரோதியாய் அர்ச்சாவதார ஸங்கம் என்கிற விலங்கு உண்டாவதே என்றபடியாகவுமாம். ஆக இப்படி இவருக்கு ஸ்ரீதேவநாதன் விஷயத்தில் உண்டான அபிமான விசேஷம் மற்றொரு திவ்யதேசத்து எம்பெருமானிடத்திலும் இல்லையென்பது ஸ்பஷ்டமாக விளங்கும்.



ஆழ்வாருக்கும் பக்தி ச்ருங்காரமாகப் பரிணமித்து நாயிகாபாவம் உண்டாயிருந்தபோதிலும் அது இவருக்குப்போல பராகாஷ்டையை அடையவில்லை. அவருடைய பர்த்ருத்வாத்யவஸாயம் திருத் தொலைவில்லிமங்கலத்து எம்பெருமான் விஷயத்திலும் ஸ்ரீரங்கநாதன் விஷயத்திலும் திருக்கோளூர் எம்

பெருமாள் விஷயத்திலுமாக மாறிமாறி நின்றது. இவருக்கோ இவர் கைப்பற்றின பதிவ்ரதா தர்மத்திற்கேற்ப அந்த அநுஸந்தானம் ஸ்ரீ தேவநாதன் விஷயத்திலேயேயாய்நின்றது. விரக்த சிரோமணியான இவரையும் பெண்ணுடை உடுத்தும்படி செய்த விசேஷம் ஸ்ரீ தேவநாதன் ஒருவனுக்கே உள்ளது. ‘ ஸகீஹவத்ரீயாதெநாவி ஶுயாநாம் யசு காஹிவிஸஷ்வஷதாந க்ஷத்ரி நரஶக்ஷா ’ என்றும், ‘தேசொத்தாரில்லையென்னுந் தெய்வநாயகர் வாசக்குழல் மாமலராள்மணவாளனர் வாசித்தொழுமன்மதனே நன்மணற்றேப்பில் மாசிக்கடலாடி மகிழ்ந்துவருவரே ’ என்றுமிறே இவர்தாமும் அநுஸந்தித்திருப்பது.

தம்முடைய மாதுலரான அப்புள்ளாரிடம் ஸகல வித்யைகளையும் அப்யஸித்து, அவரால் உபதேசிக்கப்பெற்ற கருடமந்திரத்தை இந்தத்திவ்யதேசத்தில் ஆவ்ருத்தி செய்து, அத்தால் ப்ரத்யக்ஷமான கருடனுடைய அநுக்ரஹத்தினால் பெற்ற ஸ்ரீ ஹயக்ரீவ மந்திரத்தையும் ஆவ்ருத்திசெய்ய, ஸ்ரீ ஹயக்ரீவனும் ப்ரத்யக்ஷமாய் ஸகல வித்யைகளையும் அநுக்ரஹிக்க, அந்த அநுக்ரஹவிசேஷத்தினால், சக்ரவர்த்தித் திருமகனுக்கு அஸ்திர தேவதைகள் ‘ ஜஹெஷ ’ என்று கைகூப்பி நின்றாப்போலே, இவருக்கும் வித்யாபிமானி தேவதைகள் சூழ்ந்து கைகூப்பி நின்றபடியினால் இவருக்கு ஸர்வதந்திரஸ்வதந்திரர் என்னும் திருநாமம் ஸ்ரீரங்கநாய்ச்சியாரால் சாற்றப்பட்டது என்பதை ஸகலரும் அறிந்திருக்க சிலர் அஸூயையினால் பீடிக்கப்பட்டவர்களாய் எல்லாவற்றையும் தன் இஷ்டப்படி அர்த்தம் சொல்லுகிறவர் என்று அந்தத்திருநாமத்துக்கு அர்த்தம் என்று சொல்லுகிறார்கள். ஓரிடத்திலும் ப்ரமாணத்திற்கு மீறி அர்த்தம் சொன்னதாக நிரூபிக்கமுடியாது என்பதை ஸஹ்ருதயர்கள் கண்டு கொள்ளுவது.

பகவான் ப்ரத்யக்ஷமாக நின்றபொழுது அவரை ஸ்தோத்திரம்செய்யவேண்டும் என்கிற அவாமிகுத்திருந்தாலும் ஸ்தோத்திரம் செய்ய சக்தி இல்லாமல் தத்தளிக்கும் ஸமயத்தில் பகவான் தம்முடைய சங்கத்தினால் த்ருவனுடைய தாடையைத்தடவ உடனே அவரும் அந்த உபகாரத்தையே உபக்ரமமாகக் கொண்டு ‘ யொஹஃ ஷுவிஶ ’ என்றாரம்பித்து ஸ்தோத்திரம்செய்தாப்போலே இவரும் தமக்கு ஹயக்ரீவ ரூபியாய் ஸ்ரீ தேவநாதன் செய்தருளின உபகார விசேஷத்தையே ‘ அடியவர்பால் மெய்யைவைத்துத் தெருள்தரநின்ற தெய்வநாயக ’ என்றாரம்பித்திலேயே அருளிச்செய்தார். இப்படிப் பட்ட பக்தரை அநுக்ரஹிக்கவேண்டுமென்றே ஸ்ரீ தேவநாதனும் இந்த



திவ்யதேசத்தில் முன்பே ஸாந்நித்யம் செய்தருளினது. இவ்வர்த்தத்தை இவர்தாமே ‘ அயிந்தைமாநகரில் அமர்ந்தனை யெமக்காய் ’ என்றருளிச்செய்தார். ஆழ்வாருக்குத் திருத்தொலை வில்லிமங்கலம் போலேகாணும் இவருக்குத்திருவயிந்தைமாநகர் அவன் முன்னிவந்து நின்று இருந்து உறையும் நகரமாயிற்று.

இங்கு சிலர் ஸ்ரீதேசிகனுக்கு ஹயக்ரீவனுடைய உபாஸநத்தினலன்றே ஜ்ஞானம் உண்டாயிற்று. ஆகையினால் அவருக்குத் தேவதாந்தர பக்தி இருந்தது என்று ஏற்படுகிறதே என்று சங்கிக்கிறார்கள். ஸ்ரீஹயக்ரீவன் ராமக்ருஷ்ணாத்யவதாரங்கள்போலே பகவானுடைய ஸாக்ஷாத் அவதாரம் என்பது ‘ பன்னுகலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமாயருளிய வெம்பரமன்காண்மின்’ என்று திருமங்கையாழ்வாராலும்’ ‘ஶ்ரேதா ஹவிஷ்ஷுயதம் விஶி ஹோவாவாம் நியெ வம்ஹித ஹாநயெயஃ ’ என்கிற ச்லோகத்தில் இவ்வாசார்யன் தம்மாலும் ஸ்பஷ்டமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவ்விருத்தாந்தம் மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகிலும் ஒருவருடைய அநுக்ரஹத்தினால் பெற்ற ஜ்ஞானம் அநுபாதேயம் என்னில் மயர்வறமதி நலமருளப்பெற்ற ஆழ்வாருக்குக்கிடைத்த ஜ்ஞானமும் அநுபாதேயமாய் ஆதியில் ஸ்ரீ ஹயக்ரீவனால் உபதேசிக்கப்பட்டபடியினால் ப்ரும்மாவிற்குக் கிடைத்த வேதங்களும் அநுபாதேயங்களாக ப்ரஸங்கிக்கும்.

ஆக இப்படிக் கீழ் பல படிகளாலும் ஸ்ரீ தேசிகனுக்கு இந்த திவ்யதேசத்திலும் ஸ்ரீ தேவநாதனிடத்திலும் விசேஷமான அபிமான விசேஷம் இருந்ததென்று பரக்க நிரூபிக்கப்பட்டது. சக்ரவர்த்தித் திருமகனும் ஸீதையுடன் தாம் முன்புகூடி இருந்தகாலத்தில் விளையாடின இடத்தைக் காண்பித்து ‘ ஜஹிது ஶபா ஸாஷுஷணாஶநா ’ என்றாரம்பித்து உகந்தருளினாப்போலே ஸ்ரீ தேசிகன் முதலில் ஹயக்ரீவ கடாக்ஷம் பெற்ற திவ்யதேசமாகையினாலும், அவருடைய சித்தத்தை தம்முடைய திவ்ய வடிவழகினால் ஆகர்ஷித்து அதிலேயே மக்னமாய்ப் போம்படி செய்தது இந்த திவ்யதேசத்து எம்பெருமானாகையினாலும் இந்த திவ்யதேசமே அவருடைய விசேஷமான அபிமானத்திற்கு பாத்திரமாகையினால் அவர் இப்பொழுதும் இந்தத் திவ்யதேசத்தில் ஸாந்நித்யம் பண்ணியிருப்பார் என்பதில் ஸந்தேஹமில்லை. இப்படி ஆசார்யனுடைய அபிமானத்திற்கு விசேஷபாத்திரமான இந்தத் திவ்யதேசத்தில் அவர் விபவதசையில் எழுந்தருளி இருந்த இந்த திருமாளிகையாகிற பரமபாவனமாகிய க்ஷேத்திரம் இருக்கிறபடியினால் ததீயர்களான நமக்கு இந்த க்ஷேத்திரம் மிகவும் உத்தேச்யமாய் நிற்கிறது.

ஆதலால் தமக்கு அஸாதாரண பர்த்தாவாய் வரிக்கப்பட்ட ஸ்ரீ தேவநாதன் ஸந்நிதியில் தம்மைப் பார்த்துதம்முடைய பர்த்தாவாகிய அவன் ஸந்தோஷமடைவதற்காக இவர் தம்மை அலங்கரித்துக்கொண்டு போய்நின்று அவனே உகப்பிப்பதே இவருடைய பாதிவ்ரத்யத்திற்கு ஏற்றதாகும். இந்த ஏற்றம் மற்ற திவ்யதேசங்களுக்குக் கிடையாது. ‘[illegible]’, ‘[illegible] ப்ரியா[illegible]’ என்றிறே இவர் தாமும் அருளிச்செய்திருப்பது.

ஆகையினுல் உபக்ரமத்தில் குறிப்பிட்டபடி ஆசார்யன் விஷயத்தில் நாம் செய்யக்கூடிய கிஞ்சித் காரங்களாகிய போற்றியுகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்குபுகழ் சாற்றிவளர்ப்பதுமாகிய ஸத்காரங்களே இந்த க்ஷேத்திரத்திலேயே ஸ்வயம் ப்ரயோஜனமாய்ச் செய்வதே சிஷ்யகோடிகளான நமக்கு ப்ரதான கைங்கர்யமும் ஸாரதமமான கைங்கர்யமுமாகும். ஸ்ரீ தேசிகனுடைய விபவதசையில் இந்தத் திருமாளிகை எப்படி சிஷ்யகோடிகளினுலும், வித்யார்த்திகளினுலும், பாகவதோத்தமர்களினுலும் ஸதா சூழப்பட்டிருந்திருக்குமோ அப்படியே நாமும் அவருடைய் உத்ஸவ தினங்களிலாவது அவருடைய திருமாளிகையாகிற இந்த க்ஷேத்திரத்தில் ஒன்றுகூடி ஆசார்ய கைங்யமாகிற கிஞ்சித் காரத்தில் அந்வயித்தால் நாம் இவ்வுலகத்தில் பிறந்ததற்கு ப்ரயோஜனத்தை அடைந்தோமாவோம்.

ஸ்ரீ:

## பாகவத ஸ்வரூபமும் வைபவமும்.

(வேளுக்குடி - ஸ்ரீ. உ. வே. சேஷாத்ரி ஆசாரியர்.)

சேதநர்களுக்கு முக்திக்கு ஸாதனமாக விதிக்கப்பட்ட எல்லா தர்மங்களிலும் ஸ்ரீவைஷ்ணதர்மம் மேலானது என்று ஸர்வோத்க்ருஷ்டமாகச் சொல்லப்பட்ட ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்தில் விதிக்கப்படும் வைஷ்ணவ ஸாதாரண சின்னங்களைத் தரித்துக்கொண்டு அதில் சொல்லியபடி விசேஷாநுஷ்டானமுள்ளவர்கள் பாகவதர்களென்று சொல்லப்படுகிறுர்கள். அத்வைத பாஷ்யகாரரான சங்கரபகவத்பாதரும் பசுபத்யதிகரணத்தில் பாசுபத மதம் அவைதிகமென்று நிரூபித்து பிறகு உத்பத்யஸம்பாவாதிகரணத்தில் ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யத்தை உபபாதிக்கிற இடத்தில் ஸ்ரீபாஞ்சராத்ர தர்மநிஷ்டர்களான ஸ்ரீவைஷ்ணவர்களை பாகவதர்களென்று குறிப்பிட்டிருக்கிறுர். இவர்களுடைய ஸ்வரூபசின்னம் பாஹ்யமென்றும் (வெளிப்படையானது) ஆப்யந்தரமென்றும் (உள்ளேயுள்ளது) இருவகைப்படும்.



பாஹ்ய சின்னமாவது:— 1 ‘பரிசுத்தமாக்குவதில் அக்னிக்கொப்பானது நேமி, நேமி என்றுல் ஸுதர்சனம், அந்த நேமியால் தப்தம் பண்ணப்படாத சரீரத்தை உடையவன் விலக்ஷணமான ப்ரும்மத்தின் ஸ்தானத்தை அடையமாட்டான்’ என்று ச்ருதியிலும், 2 ‘ஒரு ஸ்த்ரீக்கு வளை முதலிய ஆபரணம் பதியினுல் வரிக்கப்பட்டதற்கு அடையாளமாவதுபோல் சங்க சக்ராத்யங்கனமாவது சேதனர்களுக்கு ஈச்வரனுடைய ஸம்பந்தத்தை அறிவிக்கிறது’ என்று ஸ்மிருதியிலும் விதிக்கப்பட்ட 3 தாபம், புண்ட்ரம், தாஸ்ய நாமம், மூலமந்த்ரோபதேசம், பகவதாராதனம் என்று சொல்லப்பட்ட பஞ்ச ஸம்ஸ்காரங்களோடு கூடின லக்ஷணங்கள்.

ஆப்யந்தர சின்னமாவது:— மனதிற்கு ஏற்படும் பரிபக்வம். அதின் ப்ரகாரமாவது, 4 ரஜோ தமோ குணங்களின் ஆதிக்யத்தாலே உண்டான காமாதிதோஷங்கள் கலக்காதபடி நிர்மலமான ஜ்ஞானத்தை உடையவர்களாகவும் பிறருடைய ஜ்ஞானபக்த்யாதி ஸத்குணங்களின் வளர்ச்சியில் அஸூயை இல்லாதவர்களாகவும், இந்த்ரிய நிக்ரஹமுள்ளவர்களாகவும், பரஹிம்ஸையை அறவொழித்து எல்லோருக்கும் நன்மையையே விளைவிக்கும்படியான நடவடிக்கையை உடையவர்களாகவும், சத்ருக்கள் மித்ரர்கள் உதாஸீனர்கள் என்று வ்யத்யாஸமில்லாதபடி எல்லோருக்கும் நல்லவனுக இயன்ற அளவு அவர்களுடைய ஆபத்துக்காலத்தில் உபகரித்து அவர்களுடைய ஆபத்தின் நிவ்ருத்தியே தன்னுடைய ஆநந்தமாக உகந்து இருப்பவர்களாகவும், பொய்கலவாத சொற்களால் பிறருடைய ஆபத்தை பரிஹரிக்கையால் ப்ரீதியை உண்டு பண்ணுவதாய் ஹிதமான வார்த்தைகளை உடையவர்களாகவும் பிறர் அநர்த்தம் கண்டு ஐயோ வென்று இரங்கும் இளகிய மனதையுடையவர்களாகவும் இருக்கை முதலான ஆத்மகுணங்களோடு கூடியிருக்கை.

---

(1) அக்நிரேவ நேமி:, நேமிரேவ ஸுதர்சந:, நேமிநா தப்ததநு: ந ததாமோ அச்நுதே.

(2) [illegible] । பதிவ்ரதா [illegible] ஹரி [illegible] விஷ்ணவே ॥

(3) தாப: புண்ட்ரஸ்ததா நாம மந்த்ரோ யாகஶ்ச பஞ்சம:.

(4) [illegible] ॥

பாகவதர்களுக்கு ப்ரதான லக்ஷணம் என்னவென்றால், அபிஜனம் வித்யை தனம் இவைகளால் வரும் கர்வமாகிற முக்குறும்பையும் விட்டு ஒழித்து மனோவாக்காயங்களினுடைய ஏகரூபதை இல்லாமையாகின்ற பரவஞ்சனத்தையும் வேரறுத்து பரிபக்வமான ஹ்ருதய முள்ளவர்களாயிருக்கும் தன்மை. இந்த பாகவதர்களிடத்தில் ஸர்வேச்வரன் ' திருமாலிரும் சோலைமலையே திருப்பாற்கடலே என்தலையே '' இத்யாதிப்படியே அநேக திவ்யதேசங்களில் பண்ணும் விருப்பத்தை இவர்களுடைய அவயவ ஏகதேசத்தில் பண்ணி பிராட்டிமார்களுடைய இங்கிதங்களுக்கும் அவகாசமின்றி எங்கும் பக்கநோக்கறியாமாலிருப்பான். இவ்வர்த்தத்தை ஸ்ரீமத் பகவத்கீதையிலே 1 ' வாஸுதேவனே தனக்கு எல்லாமாக நினைத்திருக்கும் விமலமதியான மஹாத்மா மிகவும் துர்லபன், அப்படி ஒருவன் உண்டானேயாகில் அவனே எனக்கு எல்லாவிதத்திலும் தாரகனாயிருப்பான் ' என்று ஸர்வேச்வரன்தானே அருளிச்செய்தான் அல்லவா ?

இவ்விதமான ஸ்வரூபத்தையுடைய பாகவதர்கள் நாமரூப ப்ரதான ரென்றும், ஜ்ஞான ப்ரதானரென்றும், அநுஷ்டான ப்ரதான ரென்றும் மூன்றுவிதமாக பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாமரூப ப்ரதானர்களாவது:—2 கழுத்தி லணிந்துள்ள துளஸிமணிமாலை முதலியவைகளையும், புஜங்களில் தப்த சக்ராங்கனத்தையும் நெற்றியில் ஊர்த்வபுண்ட்ரத்தையும், அவனுடைய பெயரையும் சின்னங்களையும் தரித்திருக்குமவர்கள். இவர்கள் ஸத்காரம் செய்யப்பட வேண்டியவர்கள். இவர்களின் ஸத்காரக்ரமமாவது - 3 வைஷ்ணவ சின்னங்களாலே அடையாளம் பண்ணப்பட்டவர்கள், திருடர்களாயினும் தூஷிக்கத்தகாதவர்கள்; கடனாளியாயினும் பீடிக்கத்தகாதவர்கள்; பசுப்ராயராயினும் பரிஹஸித்து மனவருத்தப்படும்படி

(1) 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌸 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍁𑌦𑍁𑌰𑍍𑌲𑌭𑌃 ।
𑌉𑌦𑌾𑌰𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵𑍈𑌤𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍 ॥

(2) 𑌯𑍇 𑌕𑌣𑍍𑌠𑌲𑌗𑍍𑌨𑌤𑍁𑌲𑌸𑍀𑌨𑌲𑌿𑌨𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌃 𑌯𑍇 𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌪𑌰𑌿
𑌚𑌿𑌹𑍍𑌨𑌿𑌤𑌶𑌙𑍍𑌖𑌚𑌕𑍍𑌰𑌾𑌃 । 𑌯𑍇 𑌵𑌾 𑌲𑌲𑌾𑌟𑌫𑌲𑌕𑍇 𑌲𑌸𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍁𑌣𑍍𑌡𑍍𑌰𑌾𑌃
𑌤𑍇 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾 𑌭𑍁𑌵𑌨𑌮𑌾𑌶𑍁 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 ॥

(3) 𑌚𑍋𑌰𑍋𑌽𑌪𑍍𑌯𑌵𑌧𑍍𑌯𑌸𑍍𑌸𑍁𑌚𑍋𑌰𑍋𑌽𑌪𑍍𑌯𑌦𑍂𑌷𑍍𑌯𑌃 । 𑌋𑌣𑍍𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑌪𑍀𑌡𑍍𑌯𑌃 𑌪
𑌶𑍁𑌪𑍍𑌰𑌾𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑌬𑌾𑌧𑍍𑌯𑌃 । 𑌯𑍋 𑌹𑍍𑌯𑌙𑍍𑌕𑌿𑌤𑍋 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑍇𑌨 𑌪𑍂
𑌜𑍍𑌯𑌸𑍍𑌸 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌸𑌮𑌾𑌨𑌃 ।



செய்யத் தகாதவர்கள்; விஷ்ணு பிம்பத்தில் பண்ணும் கௌரவத்தை அவர்களிடம் பண்ணத்தக்கவர்கள்; அவர்களுடைய ஜன்மவ்ருத்தங்களைப் பார்த்து அவமதி பண்ணாமல் பகவத் விக்ரஹத்தில் அபசாரத்துக்கு பயப்படுவதுபோல் அவர்களிடத்தில் பயப்பட்டு, சக்திக்கு அநுகுணமாய் கிஞ்சித்காரம்பண்ணி அர்க்யபாத்ய ஆசமனீயாதிகளாலே அவர்களுக்கு மனஸ்ஸந்தோஷ மடையும்படி அவர்களை ஆராதிக்க வேண்டும். அவமதி பண்ணினால், 1 ' வாராய், பூமிதேவியே! என்னுடைய பக்தனை சண்டாளனாயினும் அவனை ஜாதியையிட்டு நிந்தனை செய்துவிட்டு நூறுகோடி தாமரை மலர்களால் என்னை ஆராதித்தாலும் நான் அவனை க்ஷமிக்கமாட்டேன் ' என்கிறபடி பகவானுடைய நிக்ரஹத்துக்கு பாத்ரராய், 2' ஆசாரமின்னதென்றறியாதவராயினும், அறிந்தும் கெட்ட பழக்கமுள்ளவராயினும், தத்வஜ்ஞானமற்றவராயினும், பிறப்பால் தாழ்ந்தவராயினும், நாமரூபமுள்ளவரான என்னுடைய பக்தர்களை நிந்திப்பவர் ச்ரோத்ரியரேயாயினும், தத்க்ஷணத்தில்கர்மசண்டாளர்களாக ஆய்விடுகிறார்கள் ' என்கிறபடியே, கர்மசண்டாளராய் விடுகையாலே ப்ருஹ்மஹத்யாதி தோஷம் வருகைக்கு சிகா யஜ்ஞோபவீதமே போருமாப்போலே, அபசாரம் வருகைக்கு இவ்வைஷ்ணவ சின்னதாரணமே போருமாகையாலே, பாகவதர்களை அவமதிக்காமல் கிஞ்சித்காராதிகளாலே ஸந்தோஷப்படுத்தி ஆராதிக்கவேண்டும்.

ஜ்ஞான ப்ரதானராவது:— விடவேண்டியவை எவை என்றும் க்ரஹித்துக் கொள்ளவேண்டியவை எவை என்றும் அறிகையாகிற விவேகஜ்ஞான பரிபூர்ணராய், த்யாஜ்யங்களை விட்டுவிட்டு, உபாதேயதமமான பகவானைப்பற்றி நிற்பவர்களாயிருக்கும் த்ருப்தாதிகாரிகள். இவர்கள் ஸஹவாஸம் பண்ணுவதற்கும், ப்ரக்ருதி ஸம்பந்த கலக்கங்கள் வராமல் பரஸ்பரம் போதகராகைக்கும் யோக்யமானவர்கள்.

அநுஷ்டான ப்ரதானராவது:— விடவேண்டியவையான இந்த ஐஹிக ஸுகங்களில் வைராக்யம் பிறந்து, பகவதநுபவம் கிடையாமையாலே மிகவும் ஆர்த்தராய் ஸம்ஸாரிகளோடு இருக்கும் ஸ்திதியை உடையவர்கள். 3 'பக

(1) 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌂 𑌶𑍍𑌵𑌪𑌚𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌨𑌿𑌨𑍍𑌦𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌯𑍇 𑌨𑌰𑌾𑌃 ।
𑌪𑌦𑍍𑌮𑌕𑍋𑌟𑌿𑌶𑌤𑍇𑌨𑌾𑌪𑌿 𑌨 𑌕𑍍𑌷𑌮𑌾𑌮𑌿 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑍇 ॥

(2) 𑌅𑌨𑌾𑌚𑌾𑌰𑌾𑌨𑍍 𑌦𑍁𑌰𑌾𑌚𑌾𑌰𑌾𑌨𑌜𑍍𑌞𑌾𑌤𑍄𑌨𑍍 𑌹𑍀𑌨𑌜𑌨𑍍𑌮𑌨𑌃 ।
𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑍍 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌨𑌿𑌨𑍍𑌦𑌨𑍍 𑌸𑌦𑍍𑌯𑌶𑍍𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌤𑌾𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ॥

(3) 𑌵𑌰𑌂 𑌹𑍁𑌤𑌵𑌹𑌜𑍍𑌵𑌾𑌲𑌾𑌪𑌞𑍍𑌜𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।
𑌨 𑌶𑍌𑌰𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌵𑌿𑌮𑍁𑌖𑌜𑌨𑌸𑌂𑌵𑌾𑌸𑌵𑍈𑌶𑌸𑌮𑍍 ॥

வத் த்வேஷிகளின் நடுவில் வாஸம் பண்ணுவதைக்காட்டிலும் அக்னிஜ்வாலையால் சூழப்பட்ட ஒருகூட்டில் வாஸம் பண்ணுவது சிலாக்யம் என்று நினைக்கிறவர்கள். ' கங்குலும் பகலும் ' என்னும் திருவாய்மொழியில் பிராட்டியைப்போலே இரவும் பகலும் நித்ரையற்று 4 ஸர்வேச்வரனைக்காணவேண்டுமென்ற ஆசையாலே ஸர்வோத்க்ருஷ்டமான போகமோக்ஷங்களையும் த்ருணம்போல் உபேக்ஷித்துத்தள்ளி அத்தாலே ஈச்வரனுக்கு க்ஷணமும் தன்னைவிட்டு பிரிக்கவொண்ணாதபடி அத்யந்த ப்ரியதமரான மஹாத்மாக்கள். இவர்கள் ஆசார்யர்களாக வரணம் பண்ணவும் ஸதா அனுபவம் பண்ணவும் யோக்யராகிறார்கள்.

இப்படி மூன்று விதர்களான பாகவதர்களினுடையவும் பெருமையை பெரியாழ்வார்

" பூதமைந்தொடு வேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால்
ஏதமொன்று மிலாதவண் கையினார்கள் வாழ்திருக்கோட்டியூர்
நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய
பாததூளி படுதலா லிவ்வுலகம் பாக்கியம் செய்ததே "

இத்யாதி பாசுரங்களால் பரக்க அருளிச்செய்தார். இதன் அர்த்தம்:—

பஞ்சபூதத்தால் நிர்மாணம் செய்யப்பட்ட இந்த சரீரத்தை ஈச்வரனுக்கே உபயோகமாகும்படி செய்துகொண்டும், பஞ்சமஹாயஜ்ஞாதி கர்மங்களை பலத்தில் ஆசையில்லாமல் ஸாத்விகத்யாகபூர்வகமாய் பகவானுடைய ப்ரீணனமென்றும், கைங்கர்யமென்றும் அனுஷ்டிக்கிறவர்களாகவும், ரூபரஸகந்தாதி ஐந்து புலன்களையும் பகவத்ஸம்பந்தமுள்ளதாக செய்து கொண்டும், அவர்களுடைய ஐந்து இந்திரியங்களை ப்ராப்தமில்லாத ப்ராக்ருத விஷயஸங்கங்களில் மண்டச் செய்யாமல் ப்ராப்தமான பகவத் விஷயத்தில் ப்ரவணமாகச்செய்துகொண்டு நிர்தோஷமான கரணகளேபரங்களை யுடையவர்களான பரமோதாரர்கள் நித்யவாஸம் பண்ணும் திருக்கோட்டியூரி லெழுந்தருளி இருக்கிற ஸர்வஜகத்துக்கும் ஸ்வாமியாய் ஆச்ரிதர் விஷயமாகத் தன்னை அழியமாறி நரங்கலந்த சிங்க உருவுமான ஸர்வேச்வரனை இப்படி நாமங்கள் பல சொல்லி ஸ்துதிக்கும் பாகவதர்கள் நடமாடுவதா லேற்படும் ஸ்ரீபாதரேணுக்கள் படுதலால் இவ்வுலகம் பாக்கியத்தைச் செய்ததாக ஆனது - என்று. இவ வாழ்வாரைப் பின்பற்றி ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன்

(4) 𑌸𑌕𑍃𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑌾𑌕𑌾𑌰 𑌵𑌿𑌲𑍋𑌕𑌨𑌾𑌶𑌯𑌾 𑌤𑍃𑌣𑍀𑌕𑍃𑌤𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌮 𑌭𑍁𑌕𑍍𑌤𑌿
𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑌿𑌃.



" 𑌸𑌨𑍍𑌤𑌃𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀𑌶 𑌚𑌰𑌣𑌤𑍍𑌰𑌾𑌣 𑌶𑍇𑌖𑌰𑌾𑌃 ।
𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌾𑌣 𑌪𑌦𑌪𑌙𑍍𑌕𑌜 𑌰𑍇𑌣𑌵𑌃 ॥"

(ஸ்ரீரங்கநாதனுடைய ஸ்ரீபாதுகையை சிரஸால் வஹிக்கும் பாகவதர்கள் லோகத்தை பரிசுத்தமாக்கி ரக்ஷிக்கும் திருவடிகளின் தூளிகளையுடையராகிறார்கள்) என்றருளிச்செய்தார். ஸ்ரீஜகதாசார்யரும் ' வேதகப்பொன்போலே இவர்களோட்டை ஸம்பந்தம் ' (இப்படிப்பட்ட பாகவதர்களின் ஸம்பந்தத்தால் அனேகர் ஸ்வரூபஜ்ஞானமுண்டாகி நிறம் பெறுவார்கள்) என்று அருளிச்செய்தார்.

நம்மாழ்வாரும், ' பயிலுஞ்சுடரொளி ' என்னும் திருவாய் மொழியில் பாகவதர்களுக்கு சேஷமாயிருத்தலே இவ்வாத்மாவுக்கு புருஷார்த்தமென்றருளிச்செய்து, அதனுடைய காஷ்டை (எல்லை) ததீயபக்தர்கள் பர்யந்தமாயிருக்குமென்று பரக்க வருளிச்செய்தார். எங்ஙனேயென்னில்:—

" சன்மசன்மாந்தரங்காத்து அடியார்களைக் கொண்டுபோய்
தன்மை பெறுத்தித் தன்தாளிணைக்கீழ்க் கொள்ளுமப்பனை
தொன்மை பிதற்றவல்லாரைப் பிதற்றுமவர் கண்டீர்
நன்மை பெறுத்தெம்மை நாளுய்யக் கொள்கின்ற நம்பரே"

என்கிறபடியே ஆச்ரிதவிஷயத்திலவன் பண்ணும் மஹோபகாரங்களிலே ஈடுபட்டிருப்பவர்களைப்போற்றும் ஸ்ரீவைஷ்ணவர்கள் எனக்கென்றைக்கும் ஸ்வாமிகளென்கிறார்.

சேதனனுக்கு சரீரஸம்பந்தமாகிற ஜந்மம்வரும் ப்ரகாரத்தை சாந்தோக்ய உபநிஷத்தில் விஸ்தாரமாக பின்வருமாறு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சேதனன் மரணாந்தரம் யாம்யமார்க்கத்தாலே யமனுலகை யடைந்து அங்கு யாதநாசரீரத்தாலே நரகானுபவம்பண்ணி; அந்தச் சரீரத்தைவிட்டுப் புண்ணிய சரீரத்தை யெடுத்து ஸ்வர்க்கானுபவம் பண்ணி, பிறகு அவர்கள் 'த்வம்சம்' என்று தள்ளிவிட, அந்தச் சரீரத்தை ராக்ஷஸர் பக்ஷிக்க, ஸூக்ஷ்ம சரீரத்தோடே நிராலம்பநமான ஆகாசத்திலே விழ, ஆதித்தியன் தன் கிரணங்களாலே ஹிமத்தை க்ரஹித்து அந்த ஈரத்தாலே ஆகாசத்திலே மங்கிக்கிடக்கிற ஆத்மாவையெடுத்து மேகத்திலேபோட, அந்த ஹிமம் மேகத்திலே வர்ஷரூபமாக மாறுபாடடைந்து மழையாக பூமியைக்கிட்டி, தான்யங்களுக்குத் தாரகமான ஜலத்வாரா பயிரையடைந்து அன்னரூபமாய் பரிணமிக்குமளவும் கிடந்து அன்னத்தின்வழியே புருஷசரீரத்தை யடைந்து, சுக்லமாய் பரிணமிக்குமளவும் கிடந்து, சுக்லத்தின் வழியாக ஸ்திரீயின் சரீரத்தை

அடைந்து, பிறகு ஜன்மம் உண்டாகிறது. இப்படி கிலேசத்துடனே வருகிற ஜன்மங்களின் பரம்பரைகளை வாசனைபடி பரிஹரித்து, சேஷத்வஜ்ஞானமுடையவர்களை ஒருதேச விசேஷத்திலே கொண்டுபோய் ஸ்வரூப ஆவிர்பாவத்தைப் பிறப்பித்துத் தன் திருவடிகளின் கீழே அடிமைகொள்ளும் ஸ்வாமியானவனை அவனுடைய ஸ்வாபாவிகமான உபகாரகத்வத்தைச்சொல்லி அக்கிரமமாகப்புகழவல்லவரை தாங்களும் ப்ரேமையினுல் பரவசராய்ப் புகழுமவர்கள் கண்டீர் நம்மை அந்தமில்பேரின்பத்தடியரோ டிருக்கும் நன்மையைப்பெறும்படி பண்ணி வருங்காலமுழுவதும் உஜ்ஜீவிப்பித்துக்கொள்வாராக வச்வஸிக்கப்படுமவர்கள்—என்று.

ஆக இப்படி நிரூபிக்கப்பட்ட பாஹ்ய ஆந்தர சின்னங்களையுடையவர்களான பாகவதர்கள் முமுக்ஷுக்களான சேதனர்களுக்கு ஐஹிகத்தில் ஆச்ரயண ருசியே தொடங்கி ஆமுஷ்மிகத்தில் பகவதநுபவ கைங்கர்யங்கள் வரையிலும் உசாத்துணையாயும் வர்த்தகர்களாயுமிருக்கையாலே பரமோத்தேச்யர்களென்றதாயிற்று.

## ஆசமனம்.

(ஶ்ரீ. உப. வெ. க்ருஷ்ணமாசார்யர்.)

வேதங்களில் சொல்லப்பட்டதாயும் அல்லது அதை அனுஸரித்த ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டதாயுமுள்ள காரியங்களை ஆரம்பிக்கும்போது முதலில் கை கால்களை சுத்தி செய்துகொண்டு ஆசமனம் செய்து ப்ராணாயாமம் பண்ணி ஸங்கல்பம் பண்ணிக்கொண்டு ஆரம்பிக்கிறோம். இது அநேகமாய் ஆஸ்திகர் அனைவர்களுக்கும் அனுபவத்தில் ஏற்பட்ட விஷயமே. அவற்றுள் ஆசமனம் எதற்காகச் செய்கிறது? அதில் முக்கியமாக கவனிக்கவேண்டிய முறைகள் யாவை? என்ற விஷயங்களைக் கொஞ்சம் விசாரிப்போம்.

வைதிகமான கர்மங்களைச் செய்யும்போது சுத்தியுடனே செய்யவேண்டும் என்பதுதான் ஆசமனத்தின் முக்கியமான நோக்கம். சுத்தி என்பது தேக சுத்தி, வாக் சுத்தி, மனஸ் ஶுத்தி, என்று மூவகைப்படும். அவற்றுள் தேகசுத்தி என்பது தேகத்தின் வெளிப்புறத்தின் சுத்தி, உள்புறத்தின் சுத்தி என்று இருவகைப்படும். ஸ்நாநம் செய்வதினுல் முக்கியமாக தேகத்தின் வெளிப்புறம் சுத்தமாகிறது. இப்படி தேகசுத்தியை உத்தேசித்தே தினந்தோறும் காலை, மத்தியானம், ஸாயங்காலங்களிலும், ஆசௌசாதிகளிலும் ஸ்நாநம் செய்யவேண்டுமென்று ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஸ்நாநத்தால் தேகத்திலுள்ள அழுக்கு முதலிய அசுத்தங்கள் நீங்கி தேகம்



சுத்தமாவதுடன் அத்ருஷ்டமான சுத்தியும் உண்டாகிறது. இந்த அத்ருஷ்டமான சுத்தியைக்கருதியே அவப்ருத ஸ்நாநம் முதலியன விதிக்கப்படுகின்றன. வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொண்டால் அதனுள்ளிருக்கும் மனிதர்கள் எவ்விதம் வியாதி முதலானவைகளற்றுச் சுகமாய் வாழ்கின்ருர்களோ, அவ்விதமே தேகத்தைச் சுத்தமாய் வைத்துக்கொள்வதால் அத்தேகத்திற்குள்ளிருக்கும் ஆத்மா நிஷ்கலங்கமாய் சுத்தமான மனதுடன் இருக்கும். நதி குளம் முதலியவைகளில் அவகாஹன ஸ்நாநம் அதாவது அமிழ்ந்து ஸ்நாநம் செய்வதால் தேகத்தின் மயிர்க்கால்களின் வழியால் ஜலம் உட்சென்று உட்புறத்தையும் சுத்தப்படுத்துகின்றது. இதை உத்தேசித்தே அமிழ்ந்து ஸ்நாநம் செய்வது உத்தமமென்றும், ஜலத்தில் அமிழ்ந்துகொண்டே சில மந்திரங்களை ஜபம் செய்யவேண்டும் என்றும், வெகு நேரம் ஸ்நாநம் செய்யவேண்டும் என்றும் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

இப்படி ஸ்நாநத்தினுல் முக்கியமாய் தேகத்தின் வெளிப்புறம் சுத்தியடைந்தபிறகு உள்புறத்தையும் இந்திரியங்களையும் சுத்தி செய்வதற்காக ஆசமனம் விதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் அச்யுத, அநந்த, கோவிந்த என்கிற பகவானுடைய திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு மூன்றுதரம் தீர்த்தத்தை சாப்பிடுவதால் நாக்கு, வாய், ஹ்ருதயம் முதலிய உள் ப்ரதேசங்களும், கேசவமுதல் தாமோதர வரையில் உள்ள பனிரண்டு திருநாமங்களைச் சொல்லித் தொடுவதால் காது, கண் முதலிய இந்திரியங்களும் சுத்தமாகின்றன. பிறகு ப்ராணாயாமம் செய்து ப்ராணவாயுவை அடக்குவதால் தேகத்தின் உள்புறம் முழுவதும் சுத்தமாகிறது. இந்த விஷயத்தைப்பற்றி பிறகு விஸ்தாரமாய் எழுதப்படும்.

ஆசமனம் செய்யும்போது முக்கியமாய் கவனிக்கவேண்டிய சில முறைகளுண்டு. ஆசமனம் செய்வதற்குமுன் முழங்கால்வரை கால்களையும், முழங்கைவரை கைகளையும் ஜலத்தில் சுத்திசெய்து கொள்ளவேண்டும். கால் கைகளை சுத்தி செய்யும்போதெல்லாம் முழங்கால் முழங்கை வரையில் சுத்தி செய்யவேண்டியதென்பது ஸாதாரணமான முறை.

பிறகு கிழக்கு, அல்லது வடக்கு முகமாக தரையில் இரண்டு பாதங்கள் முழுவதும் படும்படி உட்கார்ந்துகொண்டு இரண்டு கைகளையும் முழங்கால்களின் நடுவில் வைத்துக்கொண்டு ஆசமனம் செய்யவேணும். பூணூல் உபவீதமாய் இருக்கவேண்டும். மேல் உத்தரீயத்தை உபவீதமாய் போட்டுக்கொள்ளவேண்டும், அல்லது இடுப்பிலாவது கட்டிக்கொள்ளவேண்டும். கழுத்து முழுவதும் மறையும்படி போர்த்துக்கொள்ளக்கூடாது. தலைமயிர் கழுத்தில் படாதபடி தூக்கி முடிந்துகொள்ளவேண்டியது. இதுவும் எப்போதும் கவனிக்கவேண்டிய முறை. உள்ளங்கையை பசுவின் காதுபோல்

வைத்துக்கொள்ளவேண்டியது. சுண்டுவிரலும் கட்டைவிரலும் மற்ற விரல்களுடன் ஸம்பந்தப்படக்கூடாது. அப்படிப்பட்டால் அது ராக்ஷஸ முத்ரையானதால் கர்மம் ஸபலமாகாது.

ஸாதாரணமாய் உஷ்ண தீர்த்தத்தால் ஆசமனம் செய்யக்கூடாது. உஷ்ண தீர்த்தமே சாப்பிடுகிறவர்களுக்கும், வியாதிக்காரர்களுக்கும் உஷ்ண தீர்த்தத்தால் ஆசமனம் செய்யலாம். ஏலக்காய், குங்குமப்பூ முதலிய வாஸனைத்ரவ்யங்கள் சேர்ந்த தீர்த்தமும், துர்நாற்றமுள்ள தீர்த்தமும், நுரை, வண்டல் முதலிய அசுத்த த்ரவ்யங்கள் கலந்த தீர்த்தமும், கால் அலம்பி மிகுதியான தீர்த்தமும், ஒருபோதும் ஆசமனத்திற்கு உதவாது. ஸாதாரணமாக பாத்திரத்திலிருக்கும் தீர்த்தத்தை இடதுகையால் வலதுகையில் சேர்த்துக்கொண்டு ஆசமனம் பண்ணலாகாது. ஆனால் அந்தப் பாத்திரம் ஸ்வர்ணத்தாலாவது, வெள்ளியாலாவது, தாம்பரத்தாலாவது செய்யப்பட்டிருந்தால் பாதகமாகாது. உள்ளங்கையில் தீர்த்தமானது ஒரு உளுந்து மூழ்கும்படியான அளவுள்ளதாக இருக்கவேண்டும். அதிகமும் கூடாது, குறைவும் கூடாது. அதிகமாகவாவது குறைவாகவாவது இருந்தால் அந்த தீர்த்தம் கள்ளுக்குச் சமானமாகும். கையில் தீர்த்தத்தை எடுத்து கட்டை விரலையும் சுண்டுவிரலையும் தனியாக ஒதுக்கிவிட்டால் எவ்வளவு தீர்த்தம் நிற்குமோ அதுவே சரியான அளவுள்ளதாகும். நதி தடாகங்களில் ஆசமனம் செய்யும்போது ஒரு பாதம் கரையிலும் மற்றொரு பாதம் ஜலத்திலும் இருக்கும்படி உட்கார்ந்து ஆசமனம் செய்யவேண்டியது. நின்றுகொண்டும், குனிந்துகொண்டும், தலையில் துணியைக் கட்டிக்கொண்டும், சொக்காய் தரித்துக்கொண்டும், மேல் உத்தரீயம் இல்லாமலும், காலில் பாதரக்ஷை தரித்துக்கொண்டும், ஆஸனத்தின்மீது உட்கார்ந்துகொண்டும், படுத்துக்கொண்டும், காக்கை, நாய், கழுதை, கோழி, பஹிஷ்டை ஸ்திரீ முதலிய அசுத்த ஜாதிகளைப் பார்த்துக்கொண்டும் ஆசமனம் செய்யக்கூடாது. ஆஹாரம் சாப்பிட்ட உடனே செய்யவேண்டிய ஆசமனம் மாத்திரம் ஆஸனத்தில் உட்கார்ந்து செய்யவேண்டுமென்று ஸ்மிருதிகள் சொல்லுகின்றன. ஈரவஸ்திரத்துடன் ஆசமனம் பண்ண நேரிட்டால் முழங்கால் அளவுள்ள தீர்த்தத்தில் நின்றுகொண்டு ஆசமனம் செய்யவேண்டியது. இந்த மாதிரி நியமத்துடன் ஆசமனம் செய்துகொண்டு வந்தால் மனது, வாக்கு, காயம் சுத்தமாவதுடன் தேகத்திற்கும் மிகவும் ஆரோக்யமுண்டு. ஸரியானபடி கவனித்தால் ஒரு தினத்திற்குள் 40 அல்லது 50 ஆசமனம் செய்யவேண்டியதாக ஏற்படுகிறது. ஒவ்வொரு ஆசமனத்திலும் 3-தடவையாக கொஞ்சம் கொஞ்சமாக தீர்த்தத்தை உட்கொள்வதினால் ஜீர்ண சக்தி வ்ருத்தியாவதுடன் ஒரு ரோகமும் வராது என்று ஆயுர்வேத சாஸ்திரத்தின் கொள்கை.

186745